**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், வலங்கைமான்.**

2026ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 18 ம் நாள் புதன்கிழமை

**அசல் வழக்கு எண். 15/2023**

வாதி தரப்பு சாட்சியாக DW.1 ன் வாக்குமூலம் 1969ம் ஆண்டின் 44வது சட்ட ஏற்பாடின் படி திரு. P. ஜேசுபாலன், எம்.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், வலங்கைமான் அவர்களால் ஆணையிடப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | பிரஜித் | Father Name | : | பன்னீர் |
| Village | : | | Taluk | : | வலங்கைமான் |
| Caste | : | | Calling | : | முதுநிலை வருவாய் ஆய்வாளர் |
| Religion | : | | Age | : | 33 |

**முதல் விசாரணை -**

நான் இவ்வழக்கின் 1ம் பிரதிவாதி தரப்பு சாட்சியாவேன். நான் 1ம் பிரதிவாதி அலுவலகத்தில் முதுநிலை வருவாய் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். எனக்கு இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க வலங்கைமான் வட்டாட்சியர் அனுமதியளித்து கடிதம் வழங்கியுள்ளார். அக்கடிதத்தை இத்துடன் தாக்கல் செய்கிறேன். எனக்கு வழக்கு விபரங்கள் கோப்புகள் மற்றும் கிராம நிர்வாக அலுவலரை விசாரித்த வகையில் தெரியும். நான் எனது தரப்பு முதல் விசாரணையை எழுத்து பூர்வமான பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ள பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் யாவும் என்னால் சொல்லப்பட்டு, எனது வழக்கறிஞரால் தயார் செய்யப்பட்டது தான். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். எனது தரப்பு நிரூபண வாக்குமூலத்தை ஏற்றுக்கொண்டு இவ்வழக்கினை தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன்.

(வாதி தரப்பில் குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது)

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN

Digitally signed by JESU BALAN
Date: 2026.02.18 18:11:21 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,
வலங்கைமான்.